**அக்குரன பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

---------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 31 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜூலை 27 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

----------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அக்குரன பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---------------------------------------------------------------------------------

ரூபா 3,007,070 இற்கான வீத வரி கணக்கின் மீதி ரூபா 2,829,656 இற்கான பட்டோலைகளின் மீதிகளுடன் இணக்கஞ் செய்யும் போது, ரூபா 177,414 இற்கான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

1.3.2 பெற வேண்டிய கணக்குகள்

---------------------------------------------

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 30,606,703 ஆக காணப்பட்டதுடன், அவற்றில் 01 வருடத்தை விட மிகைத்துள்ள கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,113,579 ஆக காணப்பட்டது. இம் மீதியில் 2015 ஜூன் 30 திகதியில் உள்ளவாறு ரூபா 1,112,339 தொகையொன்று மேலும் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது.

1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

------------------------------------------------------

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 33,398,969 இற்கான செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதியில் 01 வருட காலத்தை மிகைத்திருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,443,126 ஆகும். அம் மீதியில் 2015 ஜூன் 30 திகதியில் உள்ளவாறு ரூபா 2,306,851 இற்கான மீதி ஒன்று மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போத அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் கோவை | |
| நி.பி. 571(2) | 92 சந்தர்ப்பங்கள் தொடர்பான ரூபா 2,604,823 இற்கான காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பாக மேற் கூறிய பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை குடியரசின் தாபனக் கோவை | |
| அத்தியாயயம் XXIV பந்தி 4.4 | இறந்த அலுவலர் ஒருவரிடம் அறவிடப்பட வேண்டிய 06 வருட காலத்தை கடந்துள்ள மேலும் அறவிடப்பட வேண்டியுள்ள ரூபா 39,875 இற்கான இடர்கடன் மீதியொன்று காணப்பட்டது. |
| (இ) 2009 ஏப்ரல் 17 திகதி இலக்கம் 1597/8 கொண்ட நகர அபிவிருத்தி அதிகார சபையின் வர்த்தமானி அறிவித்தல் | 2009 முதல் 2014 வரையான காலப் பகுதியின் போது அங்கீகரிக்கப்பட்டிருந்த 419 கட்டிட விண்ணப்பங்களில் 381 இற்கு இணக்கச் சான்றிதழ் பெற்றிருக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 18,464,938 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 17,441,897 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 1,023,041 இற்கான முன்னேற்றம் ஒன்று காணப்பட்டது.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 வீத வரி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு ரூபா 2,809,911 இற்கான நிலுவை ஒன்று காணப்பட்டதுடன், ஆண்டிற்கான சிட்டை இட்டவை ரூபா 5,896,100 ஆகும். ஆண்டிற்கான நிலுவையில் மற்றும் சிட்டை இட்டவைகளில் அறவீடுகளின் சதவீதம் நூற்றிற்கு 72 ஆக காணப்பட்டமையால் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 3,007,071 ஆகும். இந்த மீதியை அறவீடு செய்தல் தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவுகள் 158(1) மற்றும் 159(1) இன் பிரகாரம் 2014 ஜூன் 30 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) அதிகாரப் பிரதேசத்தில் ஆண்டிற்கு ரூபா 2,000 ஐ விட மிகையான பெறுமதியான வீதவரி செலுத்த வேண்டிய 47 வரி செலுத்துவோரில் 01 வருடம் முதல் 05 வருடங்கள் வரையான காலவீச்சில் ரூபா 278,428 இற்கான நிலுவை வீதவரியினை அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii)

2.2.2 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

----------------------------------------------------------------------------------------------

மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 59,333 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 9,043,140 தொகையும் பெற வேண்டியக் காணப்பட்டதுடன் அவற்றில் 2015 ஜூன் 30 திகதியில் உள்ளவாறு ரூபா 4,116,755 தொகையொன்று அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது.

2.2.3 தொலைபேசி செலுத்துகை டவர் கட்டணம்

------------------------------------------------------------------------

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 10 தொலைபேசி செலுத்துகை டவர்கள் தொடர்பாக குறிப்பிட்ட கம்பனிகளில் இருந்து வர்த்தக அனுமதிப்பத்திர வருமானம் ரூபா 30,000 தொகையினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.4 அறிவித்தல் பலகைக் கட்டணம்

---------------------------------------------------

ரூபா 366,200 பெறுமதியான 12 நிரந்தர அறிவித்தல் பலகைகளுக்காக கட்டணங்கள் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

---------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பிரதேச சபைகளை வலுப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பொது நிருவாக, உள்ளூராட்சி மற்றும் சனநாயக நிருவாக விவகார அமைச்சில் இருந்து 2014 ஆம் ஆண்டு ரூபா 4,000,000 இற்கான தொகை ஒன்று கிடைத்திருந்ததுடன் அத் தொகையில் மீளாய்வாண்டின் போது ரூபா 1,748,485 தொகை மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. அவை கிடைத்த பணத்தின் நூற்றிற்கு 43.7 ஆக காணப்பட்டது.

(ஆ) காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்குச் சொந்தமான பன்ஸல் தென்ன குடியிருப்பில் மற்றும் ஹபுகொல்ல 06 ஏக்கர் குடியிருப்பில் விலான உடுகம கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 02 சனசமூக நிலையங்களைச் சேர்ந்த காணிகனை அவ் ஆணைக் குழுவில் இருந்து பிரதேச சபைக்கு உரித்தாக்குவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3.2 பன்படுத்தப்படாத மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள்

------------------------------------------------------------------------------------------------

சபைக்குச் சொந்தமான இலக்கம் 49-5805 மற்றும் இலக்கம் 49-8522 கொண்ட டிரக்டர் வண்டி மற்றும் டெய்லர் வண்டி ஒரு வருடத்தை மிகைத்த காலம் முதல் பயன்தரு வேலை ஒன்றிற்காக ஈடுபடுத்தியிருக்கவில்லை.

3.3 ஒப்பந்த நிருவாகம்

--------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மடுகஹவத்த பாதையை அபிவிருத்தி செய்தல்

-------------------------------------------------------------------------------

(i) பாதையின் மேற்பகுதியில் உள்ள உடைந்து நொருங்கியுள்ள கொங்கிரீட் பகுதிகளை அகற்றி, ABC கலவை போடுவதற்கு மதிப்பீடு

தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அவ் வேலை விடயங்களை நிறைவேற்றாமல் இருக்கும் போது, அதற்காக ரூபா 13,248 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது என 2015 ஜுன் 02 மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(ii) பாதையை கொங்கிரீட் பண்ணுவதற்காக மதிப்பிடப்பட்ட 14.10m x 2.45m x 0.125m பகுதி ஒன்று (4.32 கன மீற்றர்கள்) நிறைவேற்றியிருக்காத போது தொழில்நுட்ப அலுவலர்களினால் பிழையாக விதந்துரைத்து, ஷடரின் அடித்தல், மணல் மற்றும் கற்கள் எடுத்துச் செல்லல் உட்பட மேற்கொள்ளப்படாத வேலைகளுக்காக ரூபா 68,290 தொகையொன்று செலுத்தியிருந்ததென 2015 ஆகஸ்ட் 28 திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(ஆ) கொனகலகல மயான பாதைக்கு பாதுகாப்பு அரை சுவர் நிர்மாணித்தல்

---------------------------------------------------------------------------------------------------------------

(i) பாதுகாப்பு அரைச் சுவரின் அத்திவாரம் 1:3:6(1½) கலவையில் 7.5m x 1.06x 0.30m இற்கான அளவைகளில் கொங்கிரீட் போடப்பட்டு அதற்காக கொடுப்பனவு மேற்கொண்டிருந்த போதிலும் அவை கையினால் உடைக்கக் கூடிய 7.5m x 1.06 x 0.15m இற்கான அளவுகளில் நிர்மாணிக்கப்பட்டிருந்த தொகை 2015 ஜுன் 02 திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. இதற்காக மேற்கொள்ளப்படாத வேலைகளுக்காக ரூபா 13,510 தொகை ஒன்று செலுத்தப்பட்டிருந்தது.

(ii) பாதுகாப்பு அரைச் சுவர் 1:5 சீமெந்து கலவையில் 6''x9'' கருங்கற்கள் பயன்படுத்தி நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அதன் பிரகாரம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், கையினால் உடைக்கக் கூடிய மட்டத்திலான பலவீன சாந்து கலவை ஒன்றின் மூலம் 12''x12'' இனை மிக கூடுதலான அளவைக் கொண்ட கருங்கற்களும் கலக்கப்பட்டு மதிப்பீட்டு நியமங்களுக்கு மாற்றமாக நிர்மாணிக்கப்பட்டிருந்ததென 2015 ஜுன் 02 திகதிய மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(iv) மதிப்பீட்டில் குறிப்பிட்டுள்ள அளவைகளுக்கு மற்றும் நிர்மாண வேலைகளில் அங்கீகரிக்கப்பட்ட நியமங்களுக்க இணங்க நிர்மாணிக்கப்பட்டிருக்காமையால் மற்றும் ½ அங்குலம் இடைவெளி காணக் கூடிய விதமாக சுவர் வெடிப்படைந்திருந்தமையால் அதற்காக 2014 திசெம்பர் 09 திகதி செலவிப்பட்டுள்ள ரூபா 148,109 இற்கான செலவிடப்பட்ட ரூபா 148,109 தொகை ஒன்று பயனற்ற செலவு ஒன்றாக மாறியுள்ளது.

(இ) ரத்துகொஹு திகல கல்லன உச்சிப் பாதை நிர்மாணித்தல்

-----------------------------------------------------------------------------------------------

ரூபா 493,448 தொகைக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, தனியார் காணி ஒன்றின் ஊடாக விஹாரை ஒன்றிற்கு நுழைவதற்காக நிர்மாண வேலைகள் திட்டமிடப்பட்ட பாதையில், காணிகளின் உரிமை சட்ட ரீதியாக உரித்தாக்கப்பட்டிருக்கவில்லை. பாதையின் மரங்களை அகற்றி மண் வெட்டி எடுத்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டு, அதற்காக 2014 திசெம்பர் 09 திகதி ரூபா 140,411 தொகையொன்று கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 2015 ஜுன் 02 திகதி கணக்காய்வுப் பரிசோதனை சந்தர்ப்பம் அளவில் பாதையின் நிர்மாண வேலை கைவிடப்பட்டுள்ளது.

3.4 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

------------------------------------------------------------------------

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் ஒரு நாளைக்கு குப்பைகள் 4 ½ -5 தொன்கள் அளவில் சேகரம் ஆகின்றன. சேகரிக்கப்படும் குப்பைகளில் 1 ½ தொன்கள் மாத்திரம் சேதனப் பசளை உற்பத்திக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. ஏனைய குப்பைகளை வகைப்படுத்தாமலும் முகாமைத்துவம் இன்றியும் யாக்கஹவெல கொம்போஸ்ட் முற்றத்திற்கு அண்மையில் கிடங்கு ஒன்றில் குவிக்கப்படுகின்றன என 2015 ஜுன் 02 மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

---

4.1 கூட்டிணைந்த திட்டம்

மீளாய்வாண்டின் போது சபையின் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

4.2 பெறுகைகள் திட்டம்

ரூபா 82,775,815 இற்கான மூலதனச் செலவுகள் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காக பெறுகைகள் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

4.3 தொழிற்பாட்டுத் திட்டங்கள்

சபையினால் மீளாய்வாண்டின் போது தொழிற்பாட்டுத் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை.

4.4 அகக் கணக்காய்வு

மீளாய்வாண்டின் போது சபையில் போதியளவு அகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பீட்டு வருமானங்கள் மற்றும் செலவுகள், உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகளுடன் இணக்கஞ் செய்யும் போது 05 வருமான விடயங்களில் நூற்றிற்கு 15 முதல் நூற்றிற்கு 55 வரையும், 03 செலவு விடயங்களில் நூற்றிற்கு 14 முதல் நூற்றிற்கு 82 வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) ஒப்பந்த நிருவாகம்
(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்